சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – 70 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு நீராவி கொதிகலன்கள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசு ஆணை(நிலை)எண்.79

நாள்.17.10.2013
விஜய புரட்டாசித் திங்கள் 31 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண்.த1/13496/2013, நாள்.28.5.2013.

•••••••

ஆணை:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் 2013–2014 –ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

"தமிழ்நாட்டில் 1300 ஆதிதிராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் நல விடுதிகளும் உள்ளன. இவ்விடுதிகளில் உள்ள மாணாக்கர்களுக்கு சுகாதார முறையில் உணவு தயாரிக்க ஏதுவாக 200–க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் தங்கிப் பயிலும் 70 விடுதிகளுக்கு, தலா ரூ.5.00 இலட்சம் விலையில் மொத்தம் ரூ.3.50 கோடி செலவில் 70 உணவு சமைக்க உதவும் நீராவி கொதிகலன்கள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்".

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களிடமிருந்து விரிவான செயற்குறிப்பு பெறப்பட்டது. அதன்படி, ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 1300 விடுதிகள் இயங்கி வருகின்றன எனவும் அவற்றுள் 150 மாணவர்/மாணவியர்களுக்கு மேல் தங்கி கல்வி பயிலும் 70 விடுதிகள் உள்ளது எனவும் விடுதிகளில் எரிவாயு சிலிண்டர் மூலம் பெரிய பாத்திரங்கள் பயன்படுத்தி உணவு தயாரிக்கப்படுவதாகவும் இதனால் எரிவாயு விரைவில் தீர்ந்துவிடும் நிலையில் விறகு அடுப்பு பயன்படுத்தும் சூழ்நிலை ஏற்படுவதால் அதிக மாணவர்/மாணவியர் எண்ணிக்கை கொண்ட விடுதிகளில் குறித்த நேரத்தில் சமையல் செய்து மாணவர்களுக்கு உணவு பரிமாறுவது சிரமமான பணியாக உள்ளதாகவும் மேலும் சமைத்த உணவு சூடு குறைந்து போவதால் மாணவர்/மாணவியர் சரியாக சாப்பிடாமல் உணவு வீணாகிறது என தெரிவித்து இந்நிலையினைத் தவிர்க்கும் வகையில் 150 மாணவ/மாணவியர்களுக்கு மேல் தங்கி பயிலும் விடுதிகளுக்கு நீராவி கொதிகலன் வழங்கலாம் எனவும் அவ்வாறு வழங்கும் பட்சத்தில் விடுதிகளில் சமையல் பணியை விரைவாக முடிக்கவும் மற்றும் எரிபொருள் சிக்கனமும் ஏற்படும் எனவும் அதே வேளையில் உணவினை சுகாதாரமான முறையில் சமைக்க முடியும் என்றும் இந்நீராவி கொதிகலன்களில் பயன்படும் பாத்திரங்கள் துருவுறா எக்கினால் (Stainless Steel) செய்யப்படுவதால் கொதிகலனை சுத்தம் செய்வது எளிது எனவும் மேலும் இத்தகைய பாத்திரங்களில் உணவு தயாரிக்கும்போது உணவு சூடு குறையாமல் இருக்க வாய்ப்புள்ளது எனவும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் தமது கருத்துருவில் தெரிவித்துள்ளார்.

3. மேலும் விடுதிகளில் உணவு சமைப்பதற்கான நீராவி கொதிகலன் (Steam Boiler) வாங்குவதற்கான செலவு விவரங்களை அனுப்பியுள்ளார். அதன்படி, உயர் அழுத்த அரிசி சமையல் கருவி(Rice Cooker), உயர் அழுத்த பால் சமையல் கருவி(Milk Cooker), இட்லி பாத்திரம்(Idly Box), தோசை, சப்பாத்தி வெதுப்பக கருவி (Dosa,Chapathi,Backing Unit), மேஜை(Work Table) ஒரு முனை நுண் அலை அடுப்பு(Single burner Cooking Oven) மும்முனை நுண் அலை அடுப்பு(Three burner Cooking Oven) முதலான கருவிகள் கொண்ட ஒரு யூனிட் நீராவி கொதிகலனின்(Steam Boiler) மொத்த மதிப்பு ரூ.4,41,000/- இவற்றுடன் 14.5% வரி மற்றும் போக்குவரத்து செலவுகள் உட்பட தோராயமாக ஒரு யூனிட்டுக்கு (ஒரு விடுதி) ரூ.5,00,000/- என்ற வகையில் 70 விடுதிகளுக்கு மொத்தம் ரூ.3.50 கோடி செலவு ஏற்படும் எனவும் இதனால் 70 விடுதிகளில் தங்கியுள்ள 14,151 மாணவர்/மாணவியர்கள் பயனடைவார்கள் என்வும் மேலும் நீராவி கொதிகலன்கள் திறந்த ஒப்பந்தப் புள்ளி முறையில்(Central Open Tender System) வாங்கலாம் என தெரிவித்து இத்தொகையினை 2013-2014 -ம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யுமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 2-3 -ல் உள்ளஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் 150 மாணவ/மாணவியர்களுக்கு மேல் தங்கி கல்வி பயிலும் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 70 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு சுகாதார முறையிலும் மற்றும் குறுகிய நேரத்திலும் உணவு தயாரிக்க ஏதுவாக கீழ்குறிப்பிட்டுள்ள உபகரணங்கள்

| Sl.No. | Details | Units |
|---|---|---|
| 1. | Steam Boiler Capacity 250 Ltr. | 1 |
| 2. | Rice Cooker with S.S. Stand Capacity 20 Kgs. | 2 |
| 3. | Milk Cooker with S.S. Stand Capacity 25 Ltr. | 1 |
| 4. | Idly Box with S.S. Stand Capacity 120 Idlies | 1 |
| 5. | Dosa, Chappathi Baking Unit Size 60"x30"x36" | 1 |
| 6. | Work Table Size 46"x20"x36" | 2 |
| 7. | Single Burner Cooking Oven Size 27"x27"x16" | 2 |
| 8. | Three Burner Cooking Oven Size 48"x27"x16" | 1 |
| 9. | Steam Pipe Line | - |
| 10. | Gas Pipe Line | - |
| 11. | Exhaust Hood Complete G.I Hood Thickness: 22 Swage Duct Box: 22 Swage Blower Heavy Duty Unit 3 HP 1440 Rpm motor with Crompton make motor starter switch Duct Box, Hood, Blower unit, Erection labour charge, blower erection charges, outside wall spottong ankle frame. | - |

அடங்கிய நீராவி கொதிகலன்களை விடுதி ஒன்றுக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் 70 விடுதிகளுக்கு ( ரூ.5,00,000 x 70 = ரூ. 3,50,00,000) ரூ.3,50,00,000/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) செலவில் வாங்கி வழங்க கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு 2013-14 -ம் ஆண்டில் நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

(i) இத்திட்டத்திற்கென வாங்கப்பட வேண்டிய நீராவி கொதிகலன்களை திறந்த ஒப்பந்தப் புள்ளி முறையில் (Central Open Tender System) வாங்கப்படவேண்டும்.

(ii) இத்திட்டத்திற்கெனஒப்பளிக்கப்பட்ட தொகையில் செலவினம் போக மீதம் இருப்பின் அத்தொகையினை அரசு கணக்கில் ஒப்படைப்பு செய்தல் வேண்டும்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| | விடுதிகள் | ரூபாய் |
|---|---|---|
| 2225–ஆதிதிரவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 ஆதிதிராவிடர் நலன் –277 கல்வி – I திட்டத்தில் சேராதது – AE- மாணவர் இல்லங்கள்–19– இயந்திரமும் சாதனமும்–01– வாங்குதல் (து.தொ.கு.2225 01 277 AE 1911) | விடுதிகள்69X ரூ.5.00 இலட்சம் | ரூ.345.00 இலட்சம் |
| 2225–ஆதிதிரவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 ஆதிதிராவிடர் நலன் –277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II– மாநிலத் திட்டம் KD– மாணவரில்லங்கள்–19 இயந்திரமும் சாதனமும்–01– வாங்குதல் (து.தொ.கு. 2225 01 277 KD 1913) | விடுதிகள் 1 X ரூ.5.00 இலட்சம் | ரூ.5.00 இலட்சம் |
| மொத்தம் | விடுதிகள்70X ரூ.5.00 இலட்சம் | ரூ.350.00 இலட்சம் |

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புது துணைப் பணி குறித்த (New Instrument of Service ) செலவினமாகும். இச்செலவினத்திற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2013–2014 –ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்க்க ஏதுவாக துணை மானிய குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது–I) துறைக்கு அனுப்பிவைக்குமாறும் இயக்குநர், ஆதிதிராவிடர் நலன் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை இயக்குநர், ஆதிதிராவிடர் நலன் பெற்று, அதில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி நீராவி கொதிகலன்களை வாங்கி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக அவற்றை விடுதிகளுக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 70 விடுதிகளுக்கு நீராவி கொதிகலன்கள் வாங்கி வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9.இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண்.57823/நிதி(ஆதி(ம)பந)/2013, நாள்.15.10.2013–ல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.1652(ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்திரண்டு) –ல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்
அரசு செயலாளர்.

பெறுநர்:–
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–1,5,6,8,35.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–35/6/18.

நகல்:–
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதி (ம)பந துறை செயலர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதி(ம)பந (ஆதிந–2/ ப.மே–2/ஆதிந 7– பிரிவு), துறை, சென்னை–9.
நிதி(ஆதி(ம)பந/வ.செ.பொ–I/வ.செ.பொ–II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. விஜயபால்கரன்
பிரிவு அலுவலர் 17/10/13

| | | | |
|---|---|---|---|
| 39 | இராமநாதபுரம் | முதுகளத்தூர் | பள்ளி மாணவர் |
| 40 | சேலம் | சேலம் | கல்லூரி மாணவியர் |
| 41 | சிவகங்கை | சிவகங்கை | பள்ளி மாணவர் |
| 42 | சிவகங்கை | பூலாங்குறிச்சி | கல்லூரிமாணவர் |
| 43 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | கல்லூரி மாணவர் |
| 44 | தேனி | தேனி | பள்ளி மாணவர் |
| 45 | திருவள்ளுர் | பூந்தமல்லி | பள்ளி மாணவர் |
| 46 | திருவாருர் | திருவாருர் | கல்லூரி மாணவர் |
| 47 | திருச்சி | மணப்பாறை | பள்ளி மாணவர் |
| 48 | திருச்சி | திருச்சி–காஜாமலை | கல்லூரி மாணவர் |
| 49 | திருச்சி | திருச்சி–இராஜா காலனி | கல்லூரி மாணவர் |
| 50 | திருச்சி | திருச்சி–இராஜா காலனி | பள்ளி மாணவர் |
| 51 | திருச்சி | திருச்சி–கண்டோன்மென்ட் | பள்ளி மாணவியர் |
| 52 | திருச்சி | லால்குடி | பள்ளி மாணவர் |
| 53 | திருச்சி | துறையூர் | பள்ளி மாணவர் |
| 54 | திருச்சி | முசிறி | பள்ளி மாணவர் |
| 55 | திருச்சி | திருவெறம்பூர் | பள்ளி மாணவர் |
| 56 | திருநெல்வேலி | கடையநல்லூர் | பள்ளி மாணவர் |
| 57 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | பள்ளி மாணவர் |
| 58 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | பள்ளி மாணவியர் |
| 59 | திருவண்ணாமலை | துக்கப்பேட்டை | பள்ளி மாணவர் |
| 60 | வேலூர் | வேலூர் | கல்லூரி மாணவர் |
| 61 | விழுப்புரம் | கள்ளக்குறிச்சி | பள்ளி மாணவர் |
| 62 | விழுப்புரம் | தியாகதுருகம் | பள்ளி மாணவர் |
| 63 | விழுப்புரம் | உளுந்தூர்பேட்டை | பள்ளி மாணவர் |
| 64 | விழுப்புரம் | விழுப்புரம் | கல்லூரி மாணவர் |
| 65 | விழுப்புரம் | செஞ்சி | பள்ளி மாணவர் |
| 66 | விழுப்புரம் | செஞ்சி | பள்ளி மாணவியர் |
| 67 | விருதுநகர் | ஜோகில்பேட்டை | பள்ளி மாணவர் |
| 68 | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர் | பள்ளி மாணவர் |
| 69 | விருதுநகர் | சாத்தூர் | பள்ளி மாணவர் |
| 70 | விருதுநகர் | விருதுநகர் | பள்ளி மாணவியர் |

//உண்மை நகல்//

சா. விஜயபாஸ்கரன்
பிரிவு அலுவலர் 17/10/2013

# இணைப்பு

அரசாணை (நிலை) எண். 79 ஆதி (ம) பந (ஆதிந4) துறை, நாள். 17.10.2013.

| வ.எண். | மாவட்டம் | இடம் | விடுதி |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | ஜெயங்கொண்டம் | பள்ளி மாணவர் |
| 2. | அரியலூர் | அரியலூர் | கல்லூரி மாணவர் |
| 3 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கல்லூரி மாணவர் |
| 4 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | பள்ளி மாணவியர் |
| 5 | கடலூர் | திட்டக்குடி | பள்ளி மாணவர் |
| 6 | கடலூர் | சிதம்பரம் | பள்ளி மாணவியர் |
| 7 | கடலூர் | சேப்பாக்கம் | பள்ளி மாணவர் |
| 8 | கடலூர் | சேப்பாக்கம் | பள்ளி மாணவியர் |
| 9 | கடலூர் | காட்டுமன்னார்கோயில் | பள்ளி மாணவர் |
| 10 | கடலூர் | காட்டுமன்னார்கோயில் | பள்ளி மாணவியர் |
| 11 | கடலூர் | திருமுட்டம் | பள்ளி மாணவர் |
| 12 | கடலூர் | சிதம்பரம் | பள்ளி மாணவர் |
| 13 | கடலூர் | சேத்தியாதோப்பு | பள்ளி மாணவர் |
| 14 | கடலூர் | சேத்தியாதோப்பு | பள்ளி மாணவியர் |
| 15 | கடலூர் | திட்டக்குடி | பள்ளி மாணவியர் |
| 16 | கடலூர் | விருத்தாசலம் | பள்ளி மாணவியர் |
| 17 | தர்மபுரி | தர்மபுரி | கல்லூரி மாணவர் |
| 18 | திண்டுக்கல் | நத்தம் | பள்ளி மாணவர் |
| 19 | திண்டுக்கல் | பழனி | கல்லூரி மாணவர் |
| 20 | ஈரோடு | ஈரோடு | பள்ளிமாணவர் |
| 21 | ஈரோடு | ஈரோடு | கல்லூரி மாணவர் |
| 22 | கரூர் | குளித்தலை | பள்ளி மாணவர் |
| 23 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | கல்லூரி மாணவர் |
| 24 | மதுரை | திருமங்கலம் | பள்ளி மாணவர் |
| 25 | மதுரை | சொக்கிக்குளம் | பள்ளி மாணவியர் |
| 26 | நாமக்கல் | வளையாப்பட்டி | பள்ளி மாணவியர் |
| 27 | நீலகிரி | கூடலூர் | பள்ளி மாணவியர் |
| 28 | நீலகிரி | ஊட்டி | ஐ.டி.ஐ. மாணவர் |
| 29 | நீலகிரி | ஊட்டி | பள்ளி மாணவர் |
| 30 | பெரம்பலூர் | பெரம்பலூர் | பள்ளி மாணவர் |
| 31 | பெரம்பலூர் | பெரம்பலூர் | பள்ளி மாணவியர் |
| 32 | பெரம்பலூர் | பெண்ணாகரம் | பள்ளி மாணவர் |
| 33 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | கல்லூரி மாணவர் |
| 34 | புதுக்கோட்டை | கீரனூர் | பள்ளி மாணவர் |
| 35 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | பள்ளி மாணவியர் |
| 36 | இராமநாதபுரம் | பரமக்குடி | பள்ளி மாணவர் |
| 37 | இராமநாதபுரம் | பரமக்குடி | பள்ளி மாணவியர் |
| 38 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | பள்ளி மாணவர் |